*சரியான விடையைத் தெரிவு செய்க.*


1 RM350 திருமதி ஹஸ்னாவின் ஒரு மாத சம்பளத்தில் 40% ஆகும். அப்படியானால் அவரின் அரை வருட சம்பளம் எவ்வளவு?

A RM5 250 B RM4 250 C RM2 520 D RM875

2 ஒரு வாளியில் 3·72 $\ell$ நீர் இருந்தது. அதிலிருந்து $\frac{1}{3}$ பாகம் நீர் செடிகளுக்கு நீர் ஊற்ற பயன்படுத்தப்பட்டது. 40% நீர் பாத்திரங்கள் கழுவ பயன்படுத்தப்பட்டது. மீதம் இருக்கும் நீரின் அளவு, m$\ell$ இல், எவ்வளவு?

A 992 B 1 240 C 1 488 D 2 480

3 படம் 3 மற்றும் படம் 4, ஒரே அளவிலான சதுரங்களால் ஆனது.



படம் 3



படம் 4

சீலன் படம் 4க்கு சமமாக படம் 3ஐ கருமையாக்க நினைத்தான். அப்படியானால் அவன் இன்னும் எத்தனை கட்டங்களைக் கருமையாக்க வேண்டும்?


A 4 B 5 C 6 D 7

4 அய்னி ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்வார். நபிலா அவரைவிட ஒரு மணி நேரம் குறைவாக வேலை செய்வார். அவர்கள் இருவரும் ஒவ்வொரு வாரமும் 6 நாள்கள் வேலை செய்வர்.
அய்னிக்கு ஒரு மணி நேரத்திற்கு RM 4உம் நபிலாவிற்கு RM 5உம் வழங்கப்படுகிறது.

அவர்கள் இருவருக்கும் வழங்கப்படும் ஊதியத்தில் உள்ள வேறுபாட்டைக் கணக்கிடுக.

A RM18 B RM72 C RM192 D RM210

5 படம் 5, சம அளவிலான சதுரங்களால் ஆனது.





படம் 5

கருமையாக்கப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை, $cm^2$இல், கணக்கிடுக.

A 24 B 34 C 36 D 60

6 படம் 6, X, Y.ஆகிய இரண்டு கனச்செவ்வகங்களைக் காட்டுகிறது.




படம் 6

முழு வடிவத்தின் கன அளவை, $cm^3$இல், கணக்கிடுக.

A 520 B 320 C 280 D 200